மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதியில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, ஆயிரம்விளக்கு தொகுதி பொருப்பாளர் கலை கதிரவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

"எங்கள் வாழ்க்கையில் ஒளிவிளக்கேற்றிய முதல்வர்!"

நாமக்கல் மாவட்ட திருநங்கைகள் நெஞ்சார்ந்த நன்றி!

நாமக்கல், ஜூன் 24 -

திருநங்கைகளும் இந்த சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து, முதல் மாநிலமாக "தமிழ்நாடு இந்தியாவிலேயே திருநங்கைகள் நலவாரியத்தை" 15.4.2008 அன்று தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது. திருநங்கைகளின் நலன், சமூக பாதுகாப்பு, சமூக அங்கீகாரம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநங்கைகளின் நலனை மேம்படுத்தும் விதமாக, "திருநங்கைகள்" என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு அவர்களது சுய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு அடையாள அட்டை பெறுவது எளிமையாக்கப்பட்டுள்ளது. திருநங்கைகள் நலவாரியத்தின் மூலம் திருநங்கைகள் அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டு மனை பட்டா, குடியிருப்பு வீடுகள், தையல் இயந்திரம், உயர் கல்வி உதவித் தொகை, சுய உதவி குழுக்கள் உருவாக்குதல் உள்ளிட்டவற்றைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், திருநங்கையர் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில் தொழில் செய்திட மானியத் தொகை ரூ.50,000/ மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,500/ வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கையர்களை ஊக்குவிக்கும் விதமாக, திருநங்கையர் தினமான ஏப்ரல் 15அன்று ஒரு திருநங்கைக்கு ரூ.1,00,000/ க்கான காசோலை மற்றும் சான்றிதழ் அடங்கிய மாநில அளவிலான "திருநங்கைக்கான விருது 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும். திருநங்கைகளுக்கு சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை 171 திருநங்கைகள் கண்டறியப்பட்டு அதில் 158 திருநங்கைகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. 40 வயதிற்கு மேல் உள்ள50திருநங்கைகளுக்கு ஓய்வூதியம் மாதம் ரூ.1,500/ ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது வரை 12 திருநங்கைகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக சுயதொழில் மானியம் தலா ரூ.50,000/ வீதம் மொத்தம் ரூ.6,00,000/ வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் திருநங்கைகளின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ஒரே இடத்தில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட ஏதுவாகவும், பிற துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விதமாகவும் திருநங்கைகளின் விவரங்களை பதிவு செய்து அடையாள அட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கிடும் வகையில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து திருநங்கைகளுக்கான சிறப்பு முகாம் நடத்திட வேண்டுமென உத்தர விட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், துறையூர் சாலை, நாமக்கல் நகராட்சி திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற திருநங்கைகளுக்கான சிறப்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில், நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், நகர மைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுராசெந்தில் முன்னிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் 46 திருநங்கைகளுக்கு ரூ.3.93 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில திமுக சமூக வலைதள பொறுப்பாளரும், திருநங்கை நலவாரிய குழு உறுப்பினருமான அ.ரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் பயன்பெற்ற திருநங்கை ரேவதி கூறும் போது, நான் மாதிரிப்பள்ளிகளில் ஆளுமை வளர்ச்சி மேற்கொள்ளப்படும் அணியில் பணிகள் மேற்கொண்டு வருகிறேன். இன்றைக்கு எனது சொந்த ஊரில், நான் பிறந்த ஊரில் நாமக்கல்லில் திருநங்கைகளுக்கான முகாம் நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே திருநங்கைகள் நலவாரியத்தை" முதல் முதலாக தமிழ்நாட்டில் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அதே வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் திருநங்கைகளுக்கு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் மாதாந்திர ஓய்வூதியம், கட்டணமில்லா பேருந்து பயணம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்வதற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை எங்களுக்காக கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி.

திருநங்கை ஆர்த்தி கூறும் போது, நான் நாமக்கல் பகுதியில் வசித்து வருகிறேன். திருநங்கைகளின் நலனை மேம்படுத்தும் விதமாக ஒரே இடத்தில் அடையாள அட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை பெறுவதற்கு நாமக்கல் மாவட்ட திருநங்கைகளுக்கு சிறப்பு முகாமினை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள். மேலும் இம்முகாமில் எங்களுக்கு தையல் இயந்திரம், பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்கள். எங்கள் நலனில் அக்கறை கொண்டு இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

கேபிள் கி.தினகரன் தலைமை! க.ஜெயராமன் முன்னிலை!

பெரம்பூர் 45 (அ) வட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - பொதுக்கூட்டம்!

தமிழன் பிரசன்னா - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ - கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஜூன். 24

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 45 (அ) வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் பொதுக்கூட்டம் இன்று (24.6.2024 திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில், சுந்தரம் 3 வது தெரு, வியாசர்பாடியில் நடைபெறுகிறது.

45 (அ) வட்டச் செயலாளர் கேபிள் கி.தினகரன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், டி.கமலக்கண்ணன், க.அமுல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.மனோகரன், சி.ஏழுமலை, மீன் சுரேஷ், ஸ்ரீநிவாஸ், நி.எழிலரசன், டி.மேகலா, எம்.சுந்தரி, ஆவடி எம்.மணி, ஜெ.புரோஸ்கண்ணன், பி.பால் டேவிட், எம்.அஞ்சலை, ரா.மாறன், கே.சசிமாறன், இ.ஸ்டாலின், அசார் எம்.முருகன், எஸ்.கண்ணன், என்.இராஜேந்திரன், கே.மதன்குமார், எல்.வசந்தகுமார், ஏ.தாரகேஸ்வரி, டி.துர்காதேவி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் அ.முருகன், இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, ந.சர்ப ஜெயா தாஸ், சி.ஆனந்தி, க.சர்மிளா காந்தி, ஏ.தமிழ்செல்வன், ப.மதிவாணன், க.பாபு, த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோகரன், ஜி.மாரிமுத்து, வி.முருகன், கே.வி.ராஜன், என்.கார்த்திபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், கே.இ.செந்தமிழரசு, சி.எஸ்.இரவி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பாகம் எண். 186 உள்ள வாக்காளர்களிடம் திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் வேளாண்மை ஆத்மா குழு தலைவர் எம்.சேகர், திருப்போரூர் பேரூராட்சி மன்றத் தலைவர் பேரூர் செயலாளர் எம்.தேவராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வீ.விஜயகுமார், வடக்கு ஒன்றிய துணை செயலாளர் ஏ.ரமேஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் க.கௌரிசங்கர், ஒன்றியக்குழு உறுப்பினர் எல்.சுரேஷ், வடக்கு ஒன்றிய ம.ஜெகன், மாவட்ட, ஒன்றிய, பேரூர், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்குகள் சேகரித்தனர்.

கே கே.செல்லப்பாண்டியன் தலைமை! எம். பரமசிவம் வரவேற்புரை!

கந்தர்வக்கோட்டையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம்!

நாஞ்சில் சம்பத் - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை! பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப்பித்தன் - எம்.எம்.அப்துல்லா எம்.பி. - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஜூன் 24-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய, நகர திமுக சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்த நாள் நிறைவு விழா மாபெரும் பொதுக்கூட்டம் நாளை 25.06.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் அருகில், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பரமசிவம் வரவேற்புரையிலும் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் நாஞ்சில் சம்பத், தமிழக சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை, ஊழல் தடுப்புத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். எம்.ராஜா, எம்.தவ சுமணி, சுப்பிரமணியன், நியூஸ் ராஜேந்திரன், சு.குஞ்சப்பா, க.ராஜேந்திரன், எம்.ரவிச்சந்திரன், ராதிகா கருப்பையன், எஸ்.கோவிந்தன், டி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வுகளில் எம்.எம்.அப்துல்லா எம்.பி, ரெ.பியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, அரு.வீரமணி, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திர சேகரன், புதுகை விஜயா, கே.ஆர்.என்.போஸ், திலக வதி செந்தில், வி.என்.மணி, பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா, எம்.லியாகத்அலி, சுப. சரவணன், கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், ஆ.செந்தில், தென்னலூர் எம்.பழனியப்பன், எஸ்.அசோக்பாண்டியன், ஜெயலட்சுமி தமிழ்செல்வன், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், ஆர்.செல்லதுரை, எம்.செந்தில்குமார், செ.குறிஞ்சி வாணன், மு கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துசாமி, விழாபட்டி சிவா,

கே.எஸ்.சந்திரன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, வெ.முத்து கிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், கே.எஸ். சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், சி.சண்முகம், ஆர். ஆர்.சாமிநாதன், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், என்.சேட்டு, மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், உ. முருகேசன், பி. அண்ணாதுரை, வை.வி ஜயக்குமார், எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா,

ஆதித்யா துரைராஜா, அப்துல் ரஷீது, என்.ஜானகிராமன், செ.அர்ச்சுனன், தாமரை குழ.பழனிவேலு, வி.கோவிந்தராஜ், துவார் எம்.பாலு, எஸ்.கருணாநிதி சதீஷ், எம்.எம்.முருகேசன், அரங்கராஜன், வேலு, மயில், பாஸ்கர், பழனிச்சாமி, சண்முக பிரபு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் , உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் , கழக செயல் வீரர்கள் , அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.கலையரசன் நன்றி கூறுகிறார்.

அகில இந்திய சுற்றுலா அனுமதிச் சீட்டு விதிகளை மீறி இயக்கப்படும்

பிற மாநிலப் பதிவெண் கொண்ட ஆம்னி பேருந்துகள் மட்டுமே முடக்கப்பட்டு வருகின்றன!

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் விளக்கம்!

சென்னை,ஜூன்.24-

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாடு முழுவதிலும் 1,535 ஆம்னிப் பேருந்துகள் தமிழ்நாட்டில் பதிவு செய்து முறையாக இயங்கி வருகின்றன. இவைதவிர 943 ஆம்னிப் பேருந்துகள் பிற மாநிலங்களில் பதிவு செய்து அகில இந்திய சுற்றுலா அனுமதிச் சீட்டு பெற்று தமிழ்நாட்டிற்குள்ளாக அகில இந்திய சுற்றுலா அனுமதிச் சீட்டு விதிகளை மீறி இயங்கி வருகின்றன. இவற்றுள் பெரும்பான்மையானவை பாண்டிச்சேரி, நாகலாந்து, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பதிவு செய்து இங்கு இயங்கி வருகின்றன.

மேலும், கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் பதிவு செய்து அந்த மாநிலங்களுக்குச் செல்லாமல் தமிழ்நாட்டிற்கு எந்த ஒரு வரியும் செலுத்தாமல் தமிழ்நாட்டிற்குள்ளாகவே இயங்கி வருகின்றன. இதுவும் ஒரு விதி மீறலாகும்.

மேலும் இந்த மாநிலங்களில் பதிவு செய்யப்பட்ட ஆம்னிப் பேருந்துகளில் பல தமிழ்நாடு மாநிலம் வழியே பிற மாநிலங்களுக்கு பயணிக்கின்றன. அவ்வாறு செல்லும்பொழுது விதிகளை மீறி தமிழ்நாட்டிற்குள் பயணிகளை ஏற்றி இறக்கி செல்கின்றன. இவ்வகை ஆம்னிப் பேருந்துகளும் தமிழ்நாட்டிற்கு எந்த வரியும் செலுத்துவதில்லை.

இவ்வாறு விதிகளை மீறி இயங்கும் ஆம்னிப் பேருந்துகளால் அரசுக்கு, பேருந்து ஒன்றுக்கு ஒரு காலாண்டுக்கு குறைந்த பட்சம் ரூ.1,08,000 வீதம் ஆண்டொன்றிற்கு குறைந்த பட்சம் ரூ.4,32,000 நிதி இழப்பு எற்படுகிறது. மேலும் இத்தகைய பேருந்துகளின் உரிமையாளர்கள் நாகாலாந்து உள்ளிட்ட பிற மாநிலங்களில் தவறான ஆதாரங்களை சமர்ப்பித்து அகில இந்திய சுற்றுலா அனுமதிச் சீட்டு விதிகளுக்குப் புறம்பாக தமிழ்நாட்டிற்குள் முறைகேடாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் இயக்கி வருகின்றனர்.

இதனை ஒழுங்குபடுத்துவதற்கு போக்குவரத்து ஆணையரகத்தின் சார்பில் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவர்களின் கோரிக்கைகளுக்கேற்ப மூன்று முறை கால அவகாச நீட்டிப்பு வழங்கியும், மொத்தம் உள்ள 905 இதர மாநிலப் பதிவெண் கொண்டு அகில இந்திய சுற்றுலா அனுமதிச் சீட்டு பெற்று விதிகளுக்குப் புறம்பாக தமிழ்நாட்டிற்குள் இயங்கும் ஆம்னிப் பேருந்துகளில் நாளது தேதி வரை 112 ஆம்னி பேருந்துகள் மட்டுமே தங்களது பிற மாநிலப் பதிவெண்ணை ரத்து செய்துவிட்டு தமிழ்நாட்டில் மறுபதிவு செய்து முறையான அனுமதிச் சீட்டு பெற்று இயக்க ஆரம்பித்துள்ளனர்.

ஆனால், இன்னும் 793 ஆம்னிப் பேருந்துகள் போக்குவரத்து ஆணையரகத்தின் மூலம் விடுக்கப்பட்ட பல கட்ட எச்சரிக்கைகளையும் மீறி, தங்களது முறைகேடான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான இயக்கத்தை நிறுத்தவில்லை. இத்தகையவர்களால் அரசிற்கு ஆண்டொன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.34.56 கோடி நிதி இழப்பு ஏற்படுகிறது. அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமல் அதனை முறைகேடாகப் பயன்படுத்தி அரசுப் போக்குவரத்து கழகங்கள், அரசு விரைவு போக்குவரத்து கழகங்கள் மற்றும் விதிகளின்படி முறையாக இயங்கி வரும் ஆம்னிப் பேருந்துகளின் இயக்கங்களை சீர்குலைக்கும் விதமாக பயணக் கட்டணங்களை வெகுவாகக் குறைத்து, முறைகேடாக இயக்கி வருவதால் அரசுப் பேருந்துகளுக்கும், முறையாக இயங்கி வரும் இதர ஆம்னிப் பேருந்துகளுக்கும் கடுமையான நிதி இழப்பினை தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றன. இவர்களின் இந்தப் போக்கு தமிழ்நாட்டில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் முறையாக இயங்கும் ஆம்னிப் பேருந்துகளின் இயக்கங்களையே சீர்குலைக்கும் விதமாக உள்ளது. மேலும், இத்தகைய பிற மாநில ஆம்னிப் பேருந்துகளின் வடிவமைப்பில் அகில இந்திய அளவில் பேருந்துகளுக்கான வடிவமைப்பு நெறிமுறைகளுக்கு (All India Bus Body Code) முரணாக கூடுதல் படுக்கைகளையும், கூடுதல் இருக்கைகளையும் இருக்குமாறு வடிவமைப்பில் மாற்றம் செய்து இயக்கப்பட்டு வருகின்றன. முறைகேடான இயக்கத்தால், விபத்துகள் நேரிடும்பொழுது விதிகளை மீறி இயக்கப்பட்ட காரணத்தினால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு உரிய இழப்பீடும் நிராகரிக்கப்படும் வாய்ப்புள்ளதால், பொதுமக்களுக்கு தேவையற்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, அவர்களின் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, இத்தகைய முறைகேடாக மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக இயக்கப்படும் ஆம்னிப் பேருந்துகளின் இயக்கத்தை இனியும் அனுமதிக்க இயலாது. மேலும், இவ்வாறு முறைகேடாக மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக இயங்கும் ஆம்னிப் பேருந்துகளின் உரிமையாளர்களின் மீதும் அவர்கள் முறைகேடாக எவ்வாறு பிற மாநிலங்களில் போலி ஆவணங்கள் கொடுத்து பதிவெண்ணும், அனுமதிச் சீட்டும் பெறுகிறார்கள் என்பது குறித்தும் ஆராயந்து குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து 13.06.2024 அன்று வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின் அடிப்படையிலும், அதனைத் தொடர்ந்து பக்ரித் பண்டிகையை முன்னிட்டு வழங்கப்பட்ட காலக்கெடு நீட்டிப்பின் அடிப்படையிலும் 18.06.2024 அன்று முதல் பிற மாநிலங்களில் பதிவு செய்து அகில இந்திய சுற்றுலாச் அனுமதிச் சீட்டு விதிகளுக்குப் புறம்பாக தமிழ்நாட்டிற்குள் இயக்கப்படும் அனைத்து ஆம்னிப் பேருந்துகளும் உடனடியாக Detain செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அத்தகைய ஒரு ஆம்னிப் பேருந்தும் இனி இயங்குவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்று அறிவிப்பு துறையின் சார்பில் வெளியிடப்பட்டு இருந்தது. இதனடிப்படையில் மாநிலம் முழுவதிலும் கடந்த 18.06.2024 முதல் தீவிர வாகன தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாநிலம் முழுவதிலும் 62 ஆம்னிப் பேருந்துகள் மேற்கூறிய விதிமீறல்களுக்காக முடக்கி வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான இவ்வகை ஆம்னிப் பேருந்துகள் அவற்றின் உரிமையாளர்களால் இயக்கப்படாமல் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஆம்னிப் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் என்னையும், போக்குவரத்து ஆணையரையும் சந்தித்து அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குவதாகவும், மேற்கொண்டு 200 ஆம்னிப் பேருந்துகளுக்கு மேலாக தமிழ்நாட்டில் மறுபதிவு செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து அனைத்து பேருந்துகளின் இயக்கத்தினையும் முறைப்படுத்துவதாகவும் உறுதி அளித்துள்ளனர்.

அகில இந்திய சுற்றுலா அனுமதிச் சீட்டு பெற்று அகில இந்திய சுற்றுலா விதிகளின் படி இயங்கும் ஆம்னிப் பேருந்துகள் தொடர்ந்து இயங்குவதற்கு எந்தத் தடையும் இல்லை.

அகில இந்திய சுற்றுலா அனுமதிச் சீட்டு விதிகளை மீறி இயக்கப்படும் பிற மாநிலப் பதிவெண் கொண்ட ஆம்னிப் பேருந்துகள் மட்டுமே முடக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் கழக வேட்பாளரை ஆதரித்து சாத்தனூர் பகுதியில் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம்எல்ஏ தலைமையில் பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார் உடன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.